

# வானங்கள் திறக்கப்படுதல்

"... வானங்கள் திறக்கப்பட..." எசேக்கியேல் 1:1

ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**
ஆல் பீப்பிள் சர்ச் & வேர்ல்டு அவுட் ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு
விநியோகிக்கப்பட்டது, பெங்களூர், இந்தியா.
தற்போதைய பதிப்பு: 2023

**தகவல் தொடர்புக்கு**
All Peoples Church & World Outreach,
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: **bookrequest@apcwo.org**
Website: **apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டவை. 1982ல் தாமஸ் நெல்சன் Inc., என்பவரால் © காப்புரிமை பெறப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்குதாரர்கள்**
ஆல் பீப்பிள் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து apcwo.org/give என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள "ஆல் பீப்பிள் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்" என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**
**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்:** apcworldmissions.org

(Tamil - Open Heavens)

# வானங்கள் திறக்கப்படுதல்

வானங்கள் திறக்கப்படுதல்

"... வானங்கள் திறக்கப்பட..." எசேக்கியேல் 1:1

# பொருளடக்கம்


அறிமுகம்

1. பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் பூமியிலும் செய்யப்படுவதாக 1

2. வானம் திறக்கப்படுதல் என்றால் என்ன? 4

3. வானம் திறக்கப்படுதலுக்கு எது காரணமாய் அமைகிறது? 13

4. உங்கள் எல்லைகளில் வானம் திறந்திருக்கிறதா? 21

# அறிமுகம்

ஜனங்கள், சமூகங்கள் மற்றும் புவியியல் பகுதிகள் மீது வானங்கள் திறக்கப்படுவதைப் பற்றிய புதிய புரிதலையும் நுண்ணறிவையும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பெற்று வருகிறது.

திறந்த வானங்களுக்கான "முக்கியப் பகுதிகளாக" உலகில் சில பகுதிகள் இருப்பதாகத் தோன்றுகிறது. சொல்லப்போனால், அத்தகைய பகுதிகளில் "பரலோகத்தை இறங்கிவரச் செய்வது" என்பது எளிது. உதாரணத்திற்கு, வேல்ஸ் தேசமானது, 1859ல் தேவனுடைய சந்திப்பைப் பார்த்தது, பின்னர் 1904ல் மற்றொரு எழுப்புதல் உருவானது. புளோரிடா பகுதியானது பென்சகோலா அருள்மாரியைக் கண்டது, இது 1995ல் பிரவுன்ஸ்வில்லே எழுப்புதல் என்றும் அறியப்பட்டது, மேலும் சமீபத்தில், 2008ல் லேக்லேண்ட் தேசத்தில் அருள்மாரி பொழிந்தருளப்பட்டது.

ஆகவே, முன்னர் எழுப்புதல்கள், ஆவி பொழிந்தருளப்படுதல் மற்றும் சந்திப்புகளைக் கண்ட பகுதிகளில் வானங்கள் மீண்டும் எளிதில் திறக்கப்படும் என்று எதிர்பார்க்க நாம் ஊக்குவிக்கப்படுகிறோம். 1906ம் ஆண்டில், வேல்ஸ் மிஷனரிகள் இந்தியாவின் ஷில்லாங் பகுதியில் எழுப்புதல் அக்கினியைக் கொண்டுவந்தபோது, இந்த பிராந்தியம் ஒரு மிகப்பெரிய எழுப்புதலை அனுபவித்தது. 2000ம் ஆண்டின் தொடக்கத்தில், ஷில்லாங்கில் உள்ள விசுவாசிகள் இன்னொரு எழுப்புதலுக்காக ஆண்டவரைத் தேடத் தொடங்கினர். அவர்களின் ஊக்கமான ஜெபங்களால் மீண்டும் வானம் திறக்கப்பட்டு, 2006ம் ஆண்டு ஷில்லாங் பகுதி எழுப்புதலைக் காண அது உதவியது. பஞ்சாபில் உள்ள சியால்கோட் 1904ம் ஆண்டு தொடக்கத்தில் ஒரு பெரிய எழுப்புதலை அனுபவித்தது, அங்கு ஜான் ஹைட் என்ற நபர் தனது தீவிரமான ஜெபத்தின் மூலம் அந்த எழுப்புதல் உண்டாக ஒரு முக்கிய காரணராக இருந்தார். இந்த பிராந்தியத்தில் எழுப்புதல் மற்றும் கர்த்தருடைய சந்திப்பை மீண்டும் அனுபவிக்க முடியாது என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை.

வானங்கள் திறக்கப்படுவதைப் பற்றி வேத வாக்கியங்கள் என்ன வெளிப்படுத்துகின்றன, அதன் அர்த்தம் என்ன, அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதற்கான எளிய ஆய்வுதான் இந்தப்

புத்தகமாகும். இந்தப் புத்தகத்தை வாசிப்பதன் மூலம், ஜெபிக்கவும் தங்கள் வாழ்க்கையிலும், தங்களது உள்ளூர் திருச்சபைகள் மற்றும் தங்கள் சமூகங்கள் மீது "வானம் திறக்கப்படுதலுக்கான" வழியை உண்டாக்கவும் அநேகர் ஊக்குவிக்கப்படுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். ஒரு பிராந்தியத்தில் உள்ள உள்ளூர் திருச்சபைகள் தங்கள் நகரத்தின் மீது அல்லது பிராந்தியத்தின் மீது வானம் திறக்கப்படவும், திருச்சபை எழுப்புதல் அடையவும் மற்றும் அந்த நகரம் அல்லது பிராந்தியம் மறுரூபமடையவும் ஜெபிப்பதற்காக ஒன்றிணையும் முயற்சியில் ஒன்று கூடிவர ஏவப்படுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!
ஆஷிஷ் ராய்ச்சூர்

# 1

# பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் பூமியிலும் செய்யப்படுவதாக

ஜெபிக்கக் கற்றுக்கொடுத்ததில், கர்த்தர் நமக்கு முன் வைத்த முக்கிய காரியங்களில் ஒன்று, பரலோகத்தை பூமியில் அனுபவிப்பதை நாடுவதாகும்.

**மத்தேயு** 6:10
**உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக.**

பரலோகத்தில் உள்ளவைகள் இங்கே பூமியிலே நிறுவப்பட்டு அனுபவிக்கப்பட வேண்டும். பரலோகத்தில் செய்யப்படுபவை இங்கே பூமியில் கட்டவிழ்க்கப்படுவதைக் காண வேண்டும் என்பதே நமக்கான கட்டளையாகும். (மத்தேயு 16:18,19)

தேவன் ஏற்கனவே தம்முடைய ஜனங்களுக்கான ஒவ்வொரு ஆவிக்குரிய ஆசீர்வாதத்தையும் கட்டவிழ்த்துவிட்டார். இருப்பினும், பரலோக மண்டலங்களில்தான் சகல ஆசீர்வாதங்களும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அபிஷேகம், அற்புதங்கள், சுகமடைதல், நமது தேவைகள் சந்திக்கப்படுதல் மற்றும் பல ஆசீர்வாதங்கள் ஏற்கனவே பரலோக மண்டலங்களில் நமக்கு வழங்கப்பட்டுவிட்டன.

**எபேசியர்** 1:3
**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.**

அப்படியானால், இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஏற்கனவே நமக்குக் கொடுக்கப்பட்டுவிட்டபடியால், அவற்றை நாம் இங்கே பூமியில் நமக்காக வெளிப்படுத்த வேண்டும் என்பதே சவாலாகும். பரலோக

மண்டலங்களில் ஏற்கனவே நமக்கு அருளப்பட்டதை பூமிக்குரிய மண்டலத்தில் நடப்பிக்க வேண்டும் என்பதே நமது வாஞ்சையாக இருக்க வேண்டும்.

## பரலோக ராஜ்யத்தைப் பின்தொடர்தல்

**மத்தேயு** 11:12
**யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம்பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்.**

பூமியில் பரலோகராஜ்யத்தின் வருகையை அறிமுகப்படுத்தும் செய்தியை முதலில் கொண்டுவந்தவர் யோவான்ஸ்நானன் ஆவார் (மத்தேயு 3:2). பூமியில் பரலோக ராஜ்யத்தின் வருகை அறிவிக்கப்பட்ட காலம் முதற்கொண்டு, ஆவியில் பலமுள்ளவர்களும் அதைத் தொடர்ந்து பின்பற்றியவர்களுமே ராஜ்யத்தில் உள்ளதை எடுத்துக்கொள்பவர்களாய் இருக்கிறார்கள்! பரலோக ராஜ்யத்தில் ஏற்கனவே நமக்குக் கொடுக்கப்பட்டதை எடுத்துக்கொள்வதற்கு ஆவியில் ஒரு வைராக்கியம் கொண்டிருக்க வேண்டும், ஆவியில் ஒரு பலமான முயற்சி செய்யப்பட வேண்டும்.

இப்போது, இது ஏன் அவசியமாய் இருக்கிறது? தேவன் பரலோகராஜ்யத்தை நம்மிடமிருந்து விலக்கி வைத்திருப்பதாக எடுத்துக்கொள்ள முடியாது! உண்மையில் சொல்லப்போனால், பரலோகம் பூமியில் இறங்கி வருவதைக் காண விரும்புபவரே அவர்தான். ராஜ்யத்தை நமக்குக் கொடுப்பதில் அவர் மிகவும் மகிழ்ச்சியடைகிறார் (லூக்கா 12:32). ஆவிக்குரிய பலவந்தம் அவசியமானது என்பதற்குக் குறைந்தபட்சம் இரண்டு காரணங்களை நான் உணர்கிறேன்.

1) நமக்குக் கொடுக்கப்பட்டதை நாம் பெற்றுக்கொள்ளாமல் போகும்படிக்கு நமக்கு எதிராக சகல முயற்சியையும் செய்யும் சத்துருவாகிய பிசாசு ஒருவன் இருக்கிறான் என்பது நமக்குத் தெரியும். பரலோகம் பூமியில் இறங்கி வருவதை அவன் விரும்புவதில்லை, அதனால் தன்னால் கூடுமான எல்லா வழிகளிலும் நம்மைத் தடுக்க முயற்சிப்பான்.

2) ஆவியில் ஒரு பலமான முயற்சியை செய்யும் இடத்திற்கு வருவது என்பது, நாம் பெற்றுக்கொள்ளப் போவதை அடைய நம்மை ஆயத்தப்படுத்துகிறது. அதைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

மற்றொரு புறத்தில், அருள்மாரி (அல்லது எழுப்புதல் அல்லது சந்திப்பு) பொழிந்தருளப்படும் காலகட்டத்தில், "வானங்கள் திறக்கப்படுதல்" என்ற அனுபவத்தை நாம் அனுபவிக்கிறோம். பரலோகம் பூமியைக் கைப்பற்றும் ஒரு காலகட்டத்தில் நாம் இருக்கிறோம் என்பதே இதன் அர்த்தமாகும். இத்தகைய காலகட்டத்தில் ராஜ்யத்தின் காரியங்களைப் பெறுவதென்பது மிகவும் எளிதாகக் காணப்படுகிறது, உண்மையில், அது நம்மீது ஊற்றப்படுகிறது! பரலோகம் திறந்திருக்கிறது, எனவே, பரலோகத்தில் நமக்காக வைக்கப்பட்டுள்ளவைகளை எடுத்துக்கொண்டு, இங்கே பூமிக்குரிய மண்டலத்தில் வாழ்வது மிகவும் எளிதாகிறது.

நாம் "ஆவி பொழிந்தருளப்படுதல்," "சந்திப்பு," மற்றும் "எழுப்புதல்" ஆகிய சொற்களை ஒன்றுக்கொன்று மாற்றாக தேவனுடைய ஒரே கிரியையைக் குறிக்க பயன்படுத்துவோம். தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், "ஆவி பொழிந்தருளப்படுதல்" என்பது "வானம் திறக்கப்பட்டு, தேவனுடைய பிரசன்னம் மழையைப்போல ஜனங்கள் மீது பொழிந்தருளப்படும் ஒரு காலகட்டமாகும்." ஒரு "சந்திப்பு" என்பது "தேவன் நம் மத்தியில் நடமாடும் ஒரு காலகட்டமாகும் — அப்போது வல்லமையான அடையாளங்கள், அற்புதங்கள், இயற்கைக்கு அப்பாற்பட்ட சந்திப்புகள் மற்றும் மாற்றமடைந்த வாழ்க்கை முறை போன்றவை காணப்படும்." "எழுப்புதல்" அடைதல் என்பதற்கு "தழைத்தல் அல்லது புதிதாக மலர்தல், மீண்டும் வாழ்தல் அல்லது ஜீவனை மீண்டும் அடைதல்" என்று பொருள்படும். உலர்ந்துபோனவை இப்போது மீண்டும் தழைக்கத் தொடங்குகின்றன, மேலும் அக்கினி மீண்டும் தூண்டிவிடப்படுகிறது. ஆகவே, "எழுப்புதல்" என்பது, "தனிநபரான ஒரு விசுவாசி மற்றும் திருச்சபையில் முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட அல்லது அவர்கள் அனுபவித்த ஒன்றை மீண்டும் புதுப்பிப்பதும், மீண்டும் செயல்படுத்துவதும், மற்றும் மீண்டும் தூண்டிவிடுவதுமாகும்."

# 2
# வானம் திறக்கப்படுதல் என்றால் என்ன?

“வானம் திறக்கப்படுதல்” என்பது “ஆவி பொழிந்தருளப்படுகிற காலத்தையும், தெய்வீக சந்திப்பு மற்றும் தேவனுடைய ஜனங்கள் மத்தியில் எழுப்புதல் உண்டாகும் காலத்தையும் குறிப்பதாகும்.” இத்தகைய காலக்கட்டத்தில் தேவனுடைய ஜனங்கள் ஆவிக்குரிய மற்றும் பொருளாதார ஆசீர்வாதங்களின் பொழிந்தருளப்படுதலை அனுபவிக்கத் தொடங்குகிறார்கள். இரட்சிக்கப்படாதவர்கள் கூட தொடப்படும்படிக்கு, இது சமுதாயத்திலோ அல்லது அந்தக் குறிப்பிட்ட பிராந்தியத்திலோ "பரவுகிறது."

## வானம் திறக்கப்படுதல் என்பது தெய்வீக முன் ஏற்பாட்டைக் குறிக்கும்

உபாகமம் 28:12

**ஏற்றகாலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார்; நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்.**

சங்கீதம் 78:23-25

23 **அவர் உயரத்திலுள்ள மேகங்களுக்குக் கட்டளையிட்டு, வானத்தின் கதவுகளைத் திறந்து,**

24 **மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக்கப்பண்ணி, வானத்தின் தானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார்.**

25 **தூதர்களின் அப்பத்தை மனுஷன் சாப்பிட்டான், அவர்களுக்கு ஆகாரத்தைப் பூரணமாய் அனுப்பினார்.**

மல்கியா 3:10

**என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்.**

**அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து,**

**இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று**

**அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**

தேவனுடைய ஜனங்களின் வாழ்வில் தெய்வீக முன் ஏற்பாட்டை வெளியிடுவதற்காக வானத்தின் கதவுகளும் ஜன்னல்களும் திறக்கப்படுவதை வேதம் விவரிக்கிறது. ஜனங்களின் தேவைகள் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் பூர்த்தி செய்யப்படுகின்றன. வேலைகள், பதவி உயர்வுகள், பொருளாதார மாற்றங்கள், தொழில்களில் வளர்ச்சி, கடன் ரத்துசெய்யப்படுதல், இழந்துபோனதை மீட்பது, அநியாயமாக எடுத்துச் செல்லப்பட்டதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுதல், மேலும் தேவனுடைய ஜனங்களின் வாழ்க்கையில் பொருளாதார ஆசீர்வாதங்களைக் கொண்டுவருதல் ஆகியனவற்றுடன் தொடர்புடைய இன்னும் அநேக காரியங்கள் நடக்கத் தொடங்குகின்றன. மற்ற நேரங்களில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காது என்று சொல்ல வரவில்லை. தேவன் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவராய் இருக்கிறார், எப்போதும் நம் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார் (பிலிப்பியர் 4:19). ஆம், ஜெபத்திற்கு பதில்களைப் பெறவும் நம்முடைய தேவைகள் பூர்த்தி செய்யப்படவும் நாம் எப்போதும் விசுவாசத்துடன் நடக்க வேண்டும் (மாற்கு 11:24). இருப்பினும், வானம் திறந்திருக்கும் ஒரு காலத்தில், மிகவும் அதிகமான பொருளாதார ஆசீர்வாதங்கள் தேவனுடைய ஜனங்கள் மீது ஊற்றப்படுகின்றன என்பதிலும், அச்சமயத்தில் வித்தியாசமானவை நடக்கின்றன என்பதிலும் சந்தேகமில்லை.

## வானம் திறக்கப்படுதல் என்பது தேவனுடைய ஆவி பொழிந்தருளப்படுதலைக் குறிக்கிறது

**மத்தேயு** 3:16

**இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது, தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.**

*"வானங்கள் திறக்கப்பட்டன"* என்பது தேவனுடைய ஆவி பொழிந்தருளப்படுதலுடன் தொடர்புடைய வாக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது. இயேசு ஆவியானவரால் அபிஷேகம்

பண்ணப்பட்டிருந்தார், மேலும் அவர் அளவில்லாமல் ஆவியைப் பெற்றிருந்தார் (லூக்கா 4:17; அப்போஸ்தலர் 10:38; யோவான் 3:34). இதன் விளைவாகவே, இயேசு ஜனங்களுக்கு ஊழியம் செய்தபோது, மாபெரும் அற்புதங்களும், அடையாளங்களும், அதிசயங்களும் நடந்தன. இயேசு சென்ற இடங்களிலெல்லாம், திறக்கப்பட்ட வானத்தின் கீழ் நடந்தார் என்று கூறுவது பொருத்தமானதாயிருக்கும். வானம் அவருக்கு எப்போதும் திறந்திருந்தது. அது தெய்வீக சந்திப்பின் காலமாய் இருந்தது. தேவன் தம்முடைய ஜனங்களைச் சந்தித்திருந்தார் (லூக்கா 1:68; லூக்கா 7:16).

அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தின் முதல் எட்டு அதிகாரங்கள், இயேசுவின் ஊழிய காலத்திற்குப் பிறகு, உடனடியாக எருசலேமின் மீது வந்த திறந்த வானங்களின் அற்புதமான காலத்தை விவரிக்கின்றன. அது தேவனுடைய ஆவி வல்லமையாய் பொழிந்தருளப்பட்ட காலமாக இருந்தது (அப்போஸ்தலர் 2:17,18). இது அற்புதங்கள், அடையாளங்கள் மற்றும் அதிசயங்களின் வல்லமையான செய்கைகளை விளைவித்தது, இதைக் கண்ட அநேகர் கர்த்தரிடம் திரும்பினர் (அப்போஸ்தலர் 2:43,47).

## வானம் திறக்கப்படுதல் என்பது தேவனுடைய நீதி மற்றும் பிரசன்னம் பொழிந்தருளப்படுதலைக் குறிக்கிறது

ஏசாயா 45:8

**வானங்களே, உயர இருந்து சொரியுங்கள்,**

**ஆகாயமண்டலங்கள் நீதியைப்பொழியக்கடவது, பூமி திறவுண்டு, இரட்சிப்பின் கனியைத்தந்து, நீதியுங்கூட விளைவதாக,**

**கர்த்தராகிய நான் இவைகளை உண்டாக்குகிறேன்.**

ஓசியா 6:1-3

1 **கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்,**

**நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார், நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார்.**

2 **இரண்டு நாட்களுக்குப் பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார், மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார், அப்பொழுது நாம் அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்போம்.**

[3] **அப்பொழுது நாம் அறிவடைந்து, கர்த்தரை அடையும்படி தொடர்ந்து போவோம், அவருடைய புறப்படுதல் அருணோதயம்போல ஆயத்தமாயிருக்கிறது,**

அவர் மழையைப்போலவும், பூமியின்மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில் வருவார். வானம் திறக்கப்படுகிற காலத்தில், நீதியின் மழையும், தேவனுடைய பிரசன்னமும் மழையைப்போல நம் மீது பொழிந்தருளப்படுகிறது. தேவ ஜனங்கள் நீதி, பரிசுத்தம், தூய்மை, சுத்திகரிப்பு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவை ஒரு புதிய நிலைக்கு முன்னேறிச் செல்லும் அளவுக்கு, தேவனுடைய ஜனங்கள் அவருடைய பிரசன்னத்தைப் பற்றிய உணர்வு மற்றும் அதைக் குறித்த அறிதல் ஆகியவற்றால் அதிகமாக நிரம்பி உள்ளனர். தனிப்பட்ட வாழ்க்கையில் பாவத்தை இனி பொறுத்துக்கொள்ள முடியாது. தேவனுக்குப் பிரியமில்லாததும் ஒரு காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான பழக்கவழக்கங்கள் மற்றும் நடத்தைகள் இப்போது நிராகரிக்கப்பட்டு அகற்றப்படுகின்றன.

ஜனங்களின் இருதயம் தேவ பிரசன்னத்தையும், நீதிக்கான அவரது அழைப்பையும், அவர் செய்ய விரும்பும் அனைத்தையும் பெற்றுக்கொள்ள திறந்ததாயிருக்கிறது. கர்த்தர் மீதான பசியும், தாகமும், அவரைக் குறித்த அறிவைப் பின்தொடர்தலும் அதிகரிக்கிறது.

## வானம் திறக்கப்படுதல் என்றால் தேவதூதர்களின் அதிகப்படியான செயல்பாடு என்று அர்த்தம்

**யோவான்** 1:51
**பின்னும் அவர் அவனை நோக்கி: வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

**ஆதியாகமம்** 28:10-17
[10] **யாக்கோபு பெயர்செபாவை விட்டுப் புறப்பட்டு ஆரானுக்குப் போகப் பிரயாணம்பண்ணி,**

[11] **ஒரு இடத்திலே வந்து, சூரியன் அஸ்தமித்தபடியினால், அங்கே ராத்தங்கி, அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்து, தன் தலையின்கீழ் வைத்து, அங்கே நித்திரை செய்யும்படி படுத்துக்கொண்டான்.**

**[12] அங்கே அவன் ஒரு சொப்பனங்கண்டான். இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்.**

**[13] அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று: நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர். நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்.**

**[14] உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும். நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய். உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.**

**[15] நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப்பண்ணுவேன். நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்.**

**[16] யாக்கோபு நித்திரை தெளிந்து விழித்தபோது: மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார். இதை நான் அறியாதிருந்தேன் என்றான்.**

**[17] அவன் பயந்து, இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது! இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல, இது வானத்தின் வாசல் என்றான்.**

தேவதூதர்கள் விசுவாசிகளுக்கு ஊழியம் செய்ய அனுப்பப்பட்ட பணிவிடை ஆவிகளாய் இருக்கிறார்கள் (எபிரெயர் 1:14). வானம் திறக்கப்பட்டிருக்கும் காலத்தில், தேவதூதர்களின் செயல்பாடு அதிகரித்து காணப்படும். ஜனங்கள் தேவதூதர்களின் சந்திப்பை அதிகப்படியாக அனுபவிக்கத் தொடங்குகிறார்கள்.

இப்படிப்பட்ட செய்திகள் அடிக்கடி பிரசங்கிக்கப்படுவதை நாம் கேட்கமுடிவதில்லை என்றாலும், தேவனுடைய ஜனங்களாகிய நமக்கு தேவதூதர்களின் ஊழியம் மிகவும் முக்கியமானதாகும். கர்த்தராகிய இயேசு வனாந்தரத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட உடனேயே தேவதூதர்கள் அவருக்குப் பணிவிடை செய்தனர் (மத்தேயு 4:11). கெத்செமனே தோட்டத்தில், அவரது கடுமையான வேதனையின் நேரத்தில், இயேசு ஒரு தேவதூதனால் பலப்படுத்தப்பட்டார் (லூக்கா 22:43). இயேசுவே இவ்வாறு பணிவிடையைப் பெற்று பயனடையக் கூடுமானால், தேவதூதர்களின் பணிவிடையின் மூலம் நீங்களும் நானும் எவ்வளவு அதிகமாகப் பயனடைய முடியும்!

தேவதூதர்கள் அப்போஸ்தலர்களுக்கும் கூட பணிவிடை செய்துள்ளனர். ஒரு தூதன் அப்போஸ்தலர்களை சிறையிலிருந்து வெளியே கொண்டுவந்தான் (அப்போஸ்தலர் 5:19).

ஒரு எத்தியோப்பியனைச் சந்தித்து கிறிஸ்துவைப் பற்றி அவனுக்கு அறிவிக்கும்படி, தேவதூதன் ஒருவன் காசா பட்டணத்துக்குப்போகிற வனாந்தர மார்க்கமாய் செல்லும்படி பிலிப்புக்கு கட்டளையிட்டான் (அப்போஸ்தலர் 8:26). ஒரு தூதன் பேதுருவை சிறைச்சாலையிலிருந்து வெளியே கொண்டு வந்தான் (அப்போஸ்தலர் 12:7-11). அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் தேவதூதர்கள் இன்னும் பல காரியங்களைச் செய்வதைப் பார்க்கிறோம். ஒரு தேவதூதன் கொர்நேலியுவைச் சந்தித்து, பேதுருவை வரவழைக்கும்படி அறிவுறுத்தினான் (அப்போஸ்தலர் 10:3,7,22). இது புறஜாதிகளுக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதற்கும்—ஆரம்பகால திருச்சபை சென்றுகொண்டிருந்த திசையில் ஏற்பட்ட ஒரு மிகப்பெரிய மாற்றத்திற்கும் வழிவகுத்தது. ஒரு தேவதூதன் ஏரோதை அடித்தான், ஆகவே அவன் மரித்தான் (அப்போஸ்தலர் 12:21-23). ஒரு தூதன் பவுலுக்குத் தோன்றி, கப்பல் விபத்துக்கு சற்று முன் புயலின் மத்தியில் அவனுடைய ஜீவனுக்கும் அவனோடு கூட இருந்தவர்களுக்கும் பாதுகாப்பு உண்டு என்பதை உறுதி செய்தான் (அப்போஸ்தலர் 27:23). தேவதூதர்கள் நமக்குப் பணிவிடை செய்ய இன்னும் பல வழிகள் உள்ளன. தேவதூதர்களும் தேவதூதர்களின் சேனைகளும் நம்மைப் பாதுகாக்கிறார்கள் (சங்கீதம் 91:11), சொப்பனத்தில் நம்மிடம் பேசுகிறார்கள் (மத்தேயு 1:20), நம் வாழ்வில் தெய்வீக முன் ஏற்பாட்டைக் கொண்டு வருகிறார்கள், இயற்கைக்கு அப்பாற்பட்ட குணப்படுத்துதலை நிகழ்த்துகிறார்கள் (யோவான் 5:4), சரீர நிலைமையை மாற்றுகிறார்கள் (லூக்கா 1:18-20), நமது பிரதிஷ்டை மற்றும் சுத்திகரிப்புக்கு உதவி செய்கிறார்கள் (ஏசாயா 6:6,7) மற்றும் இன்னும் பல காரியங்களில் உதவி செய்கின்றனர்.

## வானம் திறக்கப்படுதல் என்பது அதிக அளவிலான தரிசனங்கள், வெளிப்பாடுகள் மற்றும் தேவனுடனான சந்திப்புகளைக் குறிக்கிறது

**எசேக்கியேல் 1:1**

**முப்பதாம் வருஷம் நாலாம் மாசம் ஐந்தாந்தேதியிலே, நான் கேபார் நதியண்டையிலே சிறைப்பட்டவர்கள் நடுவில் இருக்கும்போது, சம்பவித்தது என்னவென்றால், வானங்கள் திறக்கப்பட, நான் தேவதரிசனங்களைக் கண்டேன்.**

அப்போஸ்தலர் 7:55,56

55 அவன் பரிசுத்தஆவியினாலே நிறைந்தவனாய் வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு;

56 அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான்.

அப்போஸ்தலர் 10:9-17

9 மறுநாளிலே அவர்கள் பிரயாணப்பட்டு, அந்தப் பட்டணத்துக்குச் சமீபித்து வருகையில், பேதுரு ஆறாம்மணி நேரத்திலே ஜெபம்பண்ணும்படி மேல்வீட்டில் ஏறினான்.

10 அவன் மிகுந்த பசியடைந்து சாப்பிட மனதாயிருந்தான். அதற்கு அவர்கள் ஆயத்தம்பண்ணுகையில், அவன் ஞானதிருஷ்டியடைந்து,

11 வானம் திறந்திருக்கிறதாகவும், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும்,

12 அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான்.

13 அல்லாமலும் பேதுருவே, எழுந்திரு அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று.

14 அதற்குப் பேதுரு; அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான்.

15 அப்பொழுது; தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று.

16 மூன்றாந்தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக் கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

17 அப்பொழுது பேதுரு, தான் கண்ட தரிசனத்தைக்குறித்து தனக்குள்ளே சந்தேகப்படுகையில், இதோ, கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் சீமோனுடைய வீட்டை விசாரித்துக்கொண்டு வாசற்படியிலே வந்து நின்று;

வெளிப்படுத்தின விசேஷம் 4:1, 2

1 இவைகளுக்குப்பின்பு, இதோ, பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காளசத்தம்போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது: இங்கே ஏறிவா, இவைகளுக்குப்பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்று விளம்பினது.

2 உடனே ஆவிக்குள்ளானேன், அப்பொழுது, இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது, அந்தச் சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார்.

**வெளிப்படுத்தின விசேஷம்** 19:11
**பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன், இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர், அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்.**

வானங்கள் திறக்கப்பட்டபோது, தரிசனங்கள், வெளிப்பாடுகள் மற்றும் தேவனுடனான சந்திப்புகளை பூமியிலுள்ள ஜனங்கள் அனுபவித்ததாக பல இடங்களில் வேதாகமம் நமக்குக் காட்டுகிறது. பவுல் மூன்றாம் வானம் வரைக்கும், பரதீசுக்கு அழைத்துச் செல்லப்பட்டதையும், வெளிப்படையாக அறிவிக்கத் தடைசெய்யப்பட்ட விஷயங்களைக் கேட்டதையும் பகிர்ந்துகொண்டான் (2 கொரிந்தியர் 12:1-4). ஆவி பொழிந்தருளப்படுதல் மற்றும் சந்திப்பின் காலத்தில், ஜனங்கள் ஒரு திறக்கப்பட்ட வானத்தின் கீழ் இருக்கும்போது, தேவனுடைய ஜனங்கள் மத்தியில் தரிசனங்கள், சொப்பனங்கள் மற்றும் வெளிப்பாடுகள் அதிகரிக்கின்றன. தரிசனங்கள் மற்றும் வெளிப்பாடுகளைப் பெறுவதற்கு சாதாரணமாகத் தங்களை அர்ப்பணிக்காதவர்கள் கூட இத்தகைய அனுபவங்களைப் பெறத் தொடங்குகிறார்கள். அறிவை உணர்த்தும் வசனம், ஞானத்தைப் போதிக்கும் வசனம் மற்றும் ஆவிகளைப் பகுத்தறிதல் ஆகியவற்றின் வெளிப்பாட்டு வரங்களில் பலர் சிறந்து விளங்குவது மிகவும் எளிதாகிறது. சில வெளிப்பாடுகள் வாழ்க்கையை மாற்றுவதாகவும், இலக்குகளை மாற்றியமைப்பதாகவும், புதிய ஊழியங்களைத் துவக்கி வைப்பதாகவும் மற்றும் பல காரியங்களுக்கு உதவுவதாகவும் இருக்கக் கூடும்.

## வானம் திறக்கப்படுதல் என்றால் ஜெபங்களுக்குப் பதிலளிக்கப்பட்டன என்று அர்த்தம்

2 **நாளாகமம்** 30:26,27

26 **அப்படியே எருசலேமில் மகா சந்தோஷம் உண்டாயிருந்தது, தாவீதின் குமாரனாகிய சாலொமோன் என்னும் இஸ்ரவேலுடைய ராஜாவின் நாட்கள் முதற்கொண்டு இப்படி எருசலேமில் நடந்ததில்லை.**

27 **லேவியரான ஆசாரியர்கள் எழுந்து நின்று, ஜனத்தை ஆசீர்வதித்தார்கள், அவர்களுடைய சத்தம் கேட்கப்பட்டு, அவர்களுடைய விண்ணப்பம் அவருடைய பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்தில் வந்து எட்டினது.**

தேவன் எப்போதும் ஜெபத்தைக் கேட்கிறார் மற்றும் அதற்குப் பதிலளிக்கிறார் என்பதை நாம் அறிவோம். இருப்பினும், எசேக்கியா ராஜாவின் ஆட்சியின்போது இஸ்ரவேலில் எழுப்புதல்

ஏற்பட்ட காலத்தில் ஜனங்கள் அனுபவித்ததைப்போல், வானம் திறக்கப்பட்ட ஒரு காலத்தில், ஜெபத்திற்கான பதில்கள் எளிதாகவும் விரைவாகவும் பெறப்படுகின்றன. தானியேல் 21 நாட்கள் ஊக்கமாக ஜெபம் செய்து பரலோகத்திலிருந்து பதிலைப் பெறக் காத்திருந்ததற்கு இது முற்றிலும் எதிர்மாறானதாகும் (தானியேல் 10:1-13). நாம் பதில்களைப் பெற முடியாதபடிக்கு பிசாசுகள் ஏற்படுத்தும் தடைகள் குறைக்கப்படுவதோடு தேவதூதர்கள் மகத்தான பதில்களுடன் விரைந்து வருகிறார்கள்.

# 3
# வானம் திறக்கப்படுதலுக்கு எது காரணமாய் அமைகிறது?

நமது நகரம், சமூகம் அல்லது பிராந்தியத்தின் மீது வானம் திறக்கப்பட்டிருப்பதைக் காண நாம் எதையாவது செய்ய வேண்டியிருக்குமா? அப்படிச் செய்ய வேண்டுமானால், என்ன செய்ய வேண்டியதாயிருக்கும்?

அதே சமயத்தில், யாரும் எதிர்பார்க்காதபோது, தேவன் தம்முடைய சர்வவல்லமையினால் வானத்தைப் பிளந்து, கீழே இறங்கி வருவது உண்மைதான், வானங்கள் திறக்கப்படுவதைக் காண தேவனுடைய ஜனங்கள் செய்யக்கூடிய பல விஷயங்களை வேதாகமமும் சரித்திரமும் நமக்குக் கற்பிக்கின்றன.

### தேவனை ஊக்கமாய் பின்தொடர்தல்

**ஓசியா 6:1-3**

**[1] கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள், நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார், நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார்.**

**[2] இரண்டு நாட்களுக்குப் பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார், மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார், அப்பொழுது நாம் அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்போம்.**

**[3] அப்பொழுது நாம் அறிவடைந்து, கர்த்தரை அடையும்படி தொடர்ந்து போவோம், அவருடைய புறப்படுதல் அருணோதயம்போல ஆயத்தமாயிருக்கிறது, அவர் மழையைப்போலவும், பூமியின்மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில் வருவார்.**

தேவனுடைய ஜனங்களாகிய நாம் தேவனிடத்திற்குத் திரும்பி கர்த்தரைப் பின்தொடர்ந்தால், அவர் மழையைப்போல நம்மிடம் வருவார் என்று வேதாகமம் நமக்கு உறுதியளிக்கிறது. தேவனுடைய பிரசன்னமும் வல்லமையும் நம் மீது பொழிந்தருளப்படும்.

தேவன் மீதான தீராத பசிதாகம், மனந்திரும்புதல், அர்ப்பணிப்பு, தேவனுக்கு அடிபணிதல் மற்றும் அவரைத் தேடுவதற்கு நீண்ட நேரம் ஒதுக்குதல் ஆகியவற்றின் மூலம் நாம் தேவனை ஊக்கமாகப்

பின்தொடர்வது வெளிப்படுத்தப்படுகிறது. மான்கள் நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல நம் இருதயங்கள் தேவன் மீது அதிக பசிதாகமாய் இருக்க வேண்டும் (சங்கீதம் 42:1,2). ஜெபம், துதி, ஆராதனை மற்றும் கர்த்தருடைய பிரசன்னத்தில் இருப்பது, கர்த்தரின் பலமான சந்திப்பை அனுபவிப்பது ஆகியவற்றின் மூலம் தேவனை ஊக்கமாகத் தேடிய தனிநபர்கள் மற்றும் விசுவாசிகள் குழுக்களின் வல்லமையான சாட்சிகளால் சரித்திரம் நிரம்பி காணப்படுகிறது. எந்தப் பிராந்தியமாக இருந்தாலும், அதில் உள்ள ஒரு திருச்சபையால் ஏன் ஒரு குறிக்கோளோடு இதைச் செய்து தேவனுடைய சந்திப்பைப் பார்க்க முடியவில்லை என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. இறுதியாக, தேவனைப் பின்தொடர்வதும் அவருடைய பிரசன்னத்தைத் தேடுவதும் நம் விருப்பமாக இருக்கிறது. நாம் பின்தொடரும்போது, அவர் நம்மிடம் வருவார் என்று தேவன் வாக்குப்பண்ணியிருக்கிறார்! நாம் அவரைக் கிட்டிச் சேரும்போது, அவர் நம்மிடம் நெருங்கி வருவார் (யாக்கோபு 4:8).

“வீரமுள்ள ஆத்துமாக்கள் வாழ்வோ சாவோ என்று துணிந்து செய்யும் யுத்தத்தில்—அல்லது தேவைப்பட்டால், மரித்தாவது ஜெயம் பெறத் துணிந்து யுத்தத்தில் பிரவேசிக்கும்போது, எழுப்புதல் பரலோகத்திலிருந்து வருகிறது! ‘பரலோகராஜ்யம் பலவந்தத்தை அனுபவிக்கிறது, பலவந்தம் பண்ணுபவர்கள் அதைப் பலவந்தமாகப் பிடித்துக்கொள்கிறார்கள்’” என்று சார்லஸ் ஃபின்னி கூறினார்.

## தேவனுடைய ஜனங்கள் மத்தியில் ஒற்றுமை

**சங்கீதம்** 133:1-3

**1 இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?**

**2 அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும்,**

**3 எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது, அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்.**

அந்தப் பிராந்தியத்திலுள்ள தேவனுடைய ஜனங்கள் மத்தியில் உண்மையான ஐக்கியம் நிலவும் சூழ்நிலையே ஆவி பொழிந்தருளப்படுதலுக்கு முன்னோடியாக இருக்கிறது. சுயநல லட்சியம், சந்தேகம், போட்டி ஆகியவற்றை நாம் களைந்துபோட

வேண்டும். சுயநல லட்சியம் சந்தேகத்திற்கு வழிவகுக்கிறது, சந்தேகம் போட்டிக்கான கதவைத் திறக்கிறது, மற்றும் போட்டி பிரிவினைக்கு வழிவகுக்கிறது.

தேவனுடைய ஜனங்கள் பெயர், மதப்பிரிவு, உபதேச வேறுபாடுகள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் ஒற்றுமையுடன் ஒன்றாகக் கூடிவந்து, தேவனைத் தேடும் ஒரே ஒரு நோக்கத்துடன் சிறு சிறு சண்டைகளை ஒதுக்கித்தள்ளும்போது, அவருடைய ஆவியின் பிரசன்னமும் வல்லமையும் பெருமளவில் வெளிப்படும். பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவரின் மீதும், தலை முதல் கால் வரை, அபிஷேகம், புத்துணர்ச்சி, ஆசீர்வாதம் மற்றும் ஜீவன் பொழிந்தருளப்படும்!

120 சீஷர்களின் விஷயத்தில், இது உண்மையிலேயே, அப்படித்தான் நடந்தது. ஆவி பொழிந்தருளப்படுதலைப் பற்றிய வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்ட பிறகு (அப்போஸ்தலர் 1:5,8), அவர்கள் *"ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்"* (அப்போஸ்தலர் 1:14ஆ) என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது. அவர்கள் ஒற்றுமையையும் தொடர்ந்து ஜெபத்தில் தரித்திருத்தலையும் விடாமல் பற்றிக்கொண்டதால், அவர்கள் ஆவி பொழிந்தருளப்படுதலைப் பெறும் நிலையில் இருந்தனர்!

நமது நகரத்தில் போதகர்கள், பிரசங்கியார்கள், தேவனுடைய ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளாகிய ஜனங்கள்—தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை ஒதுக்கி வைத்துவிட்டு, பட்டணத்தில் உள்ள ஒவ்வொரு திருச்சபையையும் அசைக்கும் சம்பவங்களான வானம் திறக்கப்படுதல், தரிசனம், ஆவி பொழிந்தருளப்படுதல் மற்றும் எழுப்புதல் ஆகியவற்றைக் காண தேவனைத் தேடுவதற்கு ஒன்றுசேரத் தயாராக இருக்க வேண்டும் என்று நான் தேவனிடத்தில் கேட்க விரும்புகிறேன்! ராஜ்யத்தைக் குறித்த சிந்தையுள்ளவர்களும், கிறிஸ்துவைப் போன்று வாழ்கிறவர்களுமான, ஜனங்களை நேசிக்கிற தலைவர்கள் எங்கே? ஸ்தாபன மறைவை விட்டு வெளியேறும் விசுவாசிகள் எங்கே இருக்கிறார்கள், ஒரு திருச்சபை முத்திரைப் பெயரினால் வந்த பிரிவினைவாதத்திற்கு உண்மையாய் இருப்பதை விட்டுவிட்டு, ராஜாதி ராஜாவுக்கும் கர்த்தாதி கர்த்தருக்கும், அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய திருச்சபைக்கும் விசுவாசத்தை வெளிப்படுத்துபவர்கள் யார்? நம்

நகரத்தின் மீது வானம் திறக்கும்படிக்கு தேவனைத் தேட நாம் ஒன்று கூடுவோமா?

## ஊக்கமான ஜெபம்

**யாக்கோபு** 5:16-18

**16 நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.**

**17 எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை.**

**18 மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது.**

தேவன் தம்முடைய ஜனங்களின் ஊக்கமான ஜெபங்களுக்குப் பதிலளிக்கிறார். இயற்கை மழைக்காக ஜெபித்த எலியாவின் இந்த மிகச் சிறந்த உதாரணத்தை நாம் இங்கே பார்க்கலாம் (1 இராஜாக்கள் 18:41-46). பெருமழையின் சத்தம் கேட்க இருப்பதாக அவர் ஒரு அறிக்கை செய்துவிட்டு, பின் ஜெப நேரத்திற்குள் கடந்து சென்றார். அவர் ஜெபத்தில் எவ்வளவு நேரம் செலவிட்டார் என்பதற்கான எந்த குறிப்பும் நம்மிடம் இல்லை. அவர் ஜெபத்திற்கு பதில் கிடைப்பதற்கான அறிகுறிகளை ஆறு முறை எதிர்பார்த்தார், எதுவும் நடக்கவில்லை! இருப்பினும், அவர் தனது ஜெபத்தைக் கைவிடவில்லை. அவர் ஏழாவது முறையாகச் சென்று பார்த்தார், மழை வருவதற்கான ஒரு சிறிய அறிகுறி மட்டுமே தோன்றியது. அதை உறுதியாய் நம்பினார், மழை வந்தது! வானங்கள் திறக்கப்படுவதைப் பார்ப்பதற்கு நாம் செய்ய வேண்டிய ஜெபம் இதுவே. வானங்கள் திறக்கப்படுவதற்கான அறிகுறிகளே இல்லை என்று தோன்றினாலும் சோர்ந்துபோகாமல் தொடர்ந்து ஜெபங்கள் ஏறெடுக்கப்பட வேண்டும். ஊக்கமான ஜெபம்! கருத்தாய் ஏறெடுக்கப்படும் ஜெபம்! இடைவிடாது ஏறெடுக்கப்படும் ஜெபம்! மழை பொழிந்தருளப்படும் வரை நிறுத்தப்படாமல் ஏறெடுக்கப்படும் ஜெபம்!

வானம் திறக்கப்படுவதற்காக ஜெபிக்கும்படி நம்மை ஊக்குவிக்கும் இன்னும் பல பகுதிகளை வேதாகமத்திலிருந்து சுட்டிக்காட்டுகிறேன்.

2 நாளாகமம் 7:13,14

[13] நான் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து, அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கட்டளையிட்டு, அல்லது என் ஜனத்திற்குள் கொள்ளைநோயை அனுப்பும்போது,

[14] என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக்கொடுப்பேன்.

சங்கீதம் 80:14,15

[14] சேனைகளின் தேவனே, திரும்பி வாரும், வானத்திலிருந்து கண்ணோக்கிப்பார்த்து, இந்தத் திராட்சச்செடியை விசாரித்தருளும்,

[15] உம்முடைய வலதுகரம் நாட்டின கொடியையும், உமக்கு நீர் திடப்படுத்தின கிளையையும் கடாட்சித்தருளும்.

சங்கீதம் 144:5

கர்த்தாவே, நீர் உமது வானங்களைத் தாழ்த்தி இறங்கி, பர்வதங்கள் புகையும்படி அவைகளைத் தொடும்.

ஏசாயா 64:1-4

[1] ஆ, உமது நாமத்தைச் சத்துருக்களுக்குத் தெரியப்பண்ணுவதற்கும், ஜாதிகள் உம்முடைய சந்நிதிக்கு முன்தத்தளிப்பதற்கும்,

[2] தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி, உருக்கும் அக்கினி எரியுமாப்போலவும், அக்கினி தண்ணீரைப் பொங்கப்பண்ணுமாப்போலவும், பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும்படிசெய்யும்.

[3] நாங்கள் எதிர்பார்த்திராத பயங்கரமான காரியங்களை நீர் செய்தபோது, நீர் இறங்கினீர், உமது சந்நிதியில் பர்வதங்கள் உருகிப்போயின.

[4] தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்றம் முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை.

சகரியா 10:1

பின்மாரிகாலத்து மழையை கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளுங்கள். அப்பொழுது கர்த்தர் மின்னல்களை உண்டாக்கி, வயல்வெளியில் அவரவருக்குப் பயிருண்டாக அவர்களுக்கு மழையைக் கட்டளையிடுவார்.

## எதிர்பார்ப்பும் விசுவாசமும்

நாம் தேவனைப் பின்பற்றி ஒன்றாக சேர்ந்து ஜெபிக்கும்போது கூட, தேவனுடைய பிரசன்னம் மற்றும் வல்லமை வெளிப்படும்படிக்கு அதிக விசுவாசமும் எதிர்பார்ப்பும் நமக்கு இருக்க வேண்டும்.

மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் நிலத்தை உழுது விதையை விதைக்கும் விவசாயி போன்றவர்கள்தான் நாம். அவருடைய பிரசன்னம் மற்றும் வல்லமையின் ஒவ்வொரு துளியையும், தூறலையும் நாம் காணத் தொடங்கும்போது, அதைக் கொண்டாட வேண்டும். அவருடைய பிரசன்னத்தின் ஒவ்வொரு அனுபவமும், ஒவ்வொரு குணமடைதலும், அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் சரி, நாம் களிகூருவதற்கு அது போதுமானதாக இருக்கும்; ஏனென்றால் அது பெருமழை பெய்யப்போகிறது என்பதற்கான அறிகுறியாக இருக்கிறது!

## நமது அதிகாரத்தைப் பயன்படுத்துதல்

மத்தேயு 16:18,19

[18] **மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.**

[19] **பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன், பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்.**

பூமியில் பரலோகத்தை வெளிப்படுத்தும் அதிகாரம் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பரலோகத்தில் கட்டுண்டதாக தேவன் அறிவித்ததை நாம் பூமியில் கட்டுகிறோம். பரலோகத்தில் கட்டவிழ்த்துவிட அனுமதிக்கப்பட்டதை பூமியில் கட்டவிழ்த்துவிடுகிறோம். வானங்கள் திறக்கப்பட்டு நம்மீது பொழிந்தருளப்படுவதற்குத் தடையாக இருப்பனவற்றை கட்டுவதற்கு நாம் நமது ஆவிக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும். சண்டை மற்றும் பிரிவினையை உண்டாக்கும் பிசாசின் ஆவிகள், நமது எல்லைகளில் உள்ள பிசாசுகளின் தாக்கங்கள் ஆகியவை தேவன் நமக்குக் கொடுத்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் வெளியேற்றப்பட வேண்டும்.

## ஆவி பொழிந்தருளப்படுதலின் காலம் ஏன் முடிவடைகிறது

தேவனுடைய எழுப்புதல் அல்லது ஆவி பொழிந்தருளப்படுதல் ஒவ்வொன்றும் தனித்துவமானது என்றாலும், தேவனுடைய ராஜரீக அசைவாடுதலைப் பெறுவதற்கும் அதை காத்துக்கொள்வதற்கும் சில ஒற்றுமைகள் உள்ளன. ஒரு திருச்சபை மீதோ அல்லது ஒரு குழுவின் மீதோ அக்கினி வரும்போது, தேவன் தமது ஜனங்களிடமிருந்து பதிலை எதிர்பார்க்கிறார். ஜனங்கள்

கிறிஸ்துவையும் அவருடைய எழுப்புதல் கிரியையையும் தங்கள் வாழ்வின் மையமாக மாற்றும்படிக்கு மற்ற நிகழ்ச்சி நிரல்களையும் திட்டங்களையும் ஒதுக்கித்தள்ளி, தொடர்ந்து இவைகளையே செய்யும்போது, ஆவி பொழிந்தருளப்படுதல் தொடர்வதோடு தேவன் சந்திக்கும் இடம் அவரது பிரசன்னம் வாசம் செய்யும் ஸ்தலமாக மாறுகிறது. அக்கினி பொழிந்தருளப்படும்போது, நமது நாட்காட்டிகளை முற்றிலும் மாற்றியமைத்து, நம் வாழ்க்கையை அவரை நோக்கி செலுத்துவதால், நமது முழு அர்ப்பணிப்பானது ஆவி பொழிந்தருளப்படுதலுக்கு சரியாக பதிலளிக்க நம்மை ஆயத்தப்படுத்தும்.

எழுப்புதல் நாம் வாழும் விதத்தையும், நாம் சிந்திக்கும் விதத்தையும், நாம் திருச்சபையை நடத்தும் விதத்தையும் முற்றிலும் மாற்றிவிடும். பெரும்பாலானவர்கள் தங்கள் உள்ளத்தின் ஆழத்திலும் மனதிலும், இன்னும் இத்தகைய தீவிர மாற்றத்திற்கு ஆயத்தமாக இல்லை.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே ஆவி பொழிந்தருளப்படுதல் வந்திறங்கி, தங்கியிருப்பதற்கான காரணம் பொதுவாக ஒன்றே ஒன்றுதான். ஜனங்களோ அல்லது தலைமைத்துவத்தில் உள்ளவர்களோ இந்த பூமிக்குரிய காரியங்களைப் பற்றி மீண்டும் கவலைப்படத் தொடங்குவதே, அது நிரந்தரமாக நீடிக்காததற்குக் காரணமாகிவிடுகிறது. சாதாரண விஷயங்களைக் குறித்த நெருக்கடிகளும் ஆசைகளும் அவர்களின் வாழ்க்கையில் தேவனுடைய அசைவாடுதலுக்கான இடத்தை கொள்ளையடிக்கத் தொடங்குகின்றன; ஆகவே அது தொடர்வதில்லை. நம் வாழ்விலும், திருச்சபைகளிலும் தேவனுடைய அசைவாடுதல் தொடர்ந்து நடைபெற இடமளிக்க விருப்பமின்மையாலும் ஆர்வமில்லாததாலும், நமது வைராக்கியமும் தேவனுடைய பிரசன்னமும் குன்றிப்போவது அவருடைய திட்டம் அல்ல. நாம் எழுப்புதலை விட வேறு காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் எழுப்புதல் வராது அல்லது தொடர்ந்து தங்கியிருக்காது. நாட்காட்டியின் திட்டங்களை அப்புறப்படுத்திவிட்டு, நம் வாழ்வை வெறுமையாக்கி, வெறுமையான பாத்திரமாக மாறும்போதுதான் தேவனுடைய ஆவி பொழிந்தருளப்படுதலை நம்மால் அனுபவிக்க முடியும். நாம் மற்ற காரியங்களைச் செய்யத் தொடங்கினால், நாம் தேவனுடைய ஆவி

பொழிந்தருளப்படுதலைத் தொடர்ந்து அனுபவிக்க மாட்டோம். நல்ல ஊழிய காரியங்கள் கூட ஆவியானவர் நம் வாழ்வில் கொண்டுவரும் பொழிந்தருளப்படுதலைத் தடுக்கக் கூடும்.

(*‘ஐ சா தி ஸ்மித்டன் அவுட்போரிங்,* ரான் மெக்கட்லின், 2002’ என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது)

**தேவன் இறங்கி வந்து, நம் மீதும், நமது திருச்சபையின் மீதும், நமது நகரத்தில் உள்ள திருச்சபையின் மீதும், நமது நகரத்திலும் பொழிந்தருளப்படும் வரை நாம் அவரைத் தேடுவோம்.**

**தேவனையும் அவருடைய பிரசன்னத்தையும் அதிகம் அனுபவிப்பதற்காக நாம் விலைக்கிரயத்தைச் செலுத்துவோமா?**

# 4

# உங்கள் எல்லைகளில் வானம் திறந்திருக்கிறதா?

திரளான ஜனங்களால் நிரம்பி வழியும் நமது நகரங்கள் மற்றும் எல்லைகளில் நாம் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தப்போகிறோம்? ஒரு திருச்சபையால் தனியாக அதைச் செய்ய முடியாது. எந்த ஒரு சுவிசேஷகரும், எந்த ஒரு சுவிசேஷத் திட்டமும் தனியாக நம்மைப் போன்ற லட்சக்கணக்கான ஜனங்களைக் கொண்ட நகரத்தை முழுமையாக சந்தித்துவிட முடியாது. முழு வீச்சில் வரும் ஒரு எழுப்புதலும், நமது நகரத்தின் ஒவ்வொரு பகுதியும் நிரந்தரமாக அசைக்கப்படும்வரை, காலத்திற்கும் நிலைத்திருக்கும் தேவனுடைய பிரசன்னம் மற்றும் வல்லமை பலமாகப் பொழிந்தருளப்படுதலே நமது தேவையாய் இருக்கிறது. நகரம் மறுரூபமாக்கப்படுதலுக்கு எழுப்புதல் மிக அவசியமானதாகும்.

இழந்துபோன ஆத்துமாக்களின் இரட்சிப்பும் சமூகங்கள் மற்றும் நகரங்களின் உருமாற்றமுமே எழுப்புதலுக்கான முதன்மை நோக்கங்களில் ஒன்றாகும். எழுப்புதல் என்பது ஒரு திறந்த வானத்தின் தெய்வீக காலமாகும், அதில் தேவனுடைய ராஜ்யம் வல்லமையாய் வெளிப்பட்டு, திரளான ஜனங்களை குணப்படுத்துவதற்கும், விடுதலை செய்வதற்கும், இரட்சிப்பதற்கும் அது வழிவகுக்கும். நாம் நமது அற்புதங்களைப் பெற்றுக்கொள்ளவும், மகிமையால் நிரப்பப்படவும், எழுப்புதலை நம் சமூகங்களுக்குள் எடுத்துச் செல்லவும், நகரத்தில் மாற்றம் உண்டாகும்படிக்கு திருச்சபை சீர்திருத்தத்தைக் காணவும் தேவன் எழுப்புதலை அனுப்புகிறார்.

நமது நகரத்தின் மீது வானம் திறக்கப்படும் சூழலை உருவாக்க நாம் ஒன்றுபட வேண்டும் என்பதற்கான அழைப்புதான் இது. வானம் திறக்கப்படும்படிக்கு தேவனைத் தேட உங்கள் பங்கை நீங்கள் செய்வீர்களா? பற்றியெறியும் ஒரு அக்கினியை மீண்டும் பெறுவதற்கு ஒரு சிறிய அக்கினிப் பொறி மட்டுமே

தேவைப்படுகிறது. ஒரு நகரத்தைத் தலைகீழாக மாற்றக்கூடிய அக்கினியைப் பற்றவைக்க ஒரு சில நபர்கள் மட்டுமே (மேல்வீட்டறையில் உள்ள 120 பேரை நினைவில் கொள்க) தேவனுக்குத் தேவைப்படுகிறார்கள்.

**சங்கீதம்** 18:9
**வானங்களைத் தாழ்த்தி இறங்கினார், அவர் பாதங்களின்கீழ் காரிருள் இருந்தது.**

# உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார். ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால்.

**அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை

சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம்(கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார்—உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது—அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

***"… அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்" (அப்போஸ்தலர் 10:43).***

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" (ரோமர் 10:9).***

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக.*

*ஆமென்.*

# ஆல் பீப்பிள் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும்** ஒரு திருச்சபையும், ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- ஒரு **குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **மேம்படுத்தும் ஒரு மையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- **ஒரு உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நல்ல

இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், கைதேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்துக்கு ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள் நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, apcwo.org/locations ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது contact@apcwo.org க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

# இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God's Word—The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses–Don't Take Them
Open Heavens
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Speaking in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work Its Original Design

புதிய புத்தகங்கள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. PDF, ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய apcwo.org/books என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு apcwo.org/sermons என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் கவுன்சிலிங்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் கவுன்சிலிங்கானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில் ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

| | |
|---|---|
| **இளம் பிராய நடத்தை** | **நடத்தையில் சீர்கேடு** |
| **பிறரோடு இணைக்கக் குறைபாடு** | **ஆளுமை குறைபாடு** |
| **உறவுமுறை சவால்கள்** | **உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்** |
| **கல்வியில் பின்தங்கிய நிலை** | **மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி** |
| **தொழில் தொடர்பான பிரச்சினைகள்** | **மது / போதைப்பொருளுக்கு அடிமை** |
| **குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்கு பின்** | **ஆவிக்குரிய போராட்டங்கள்** |
| **பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்** | **வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை** |

கிரிசலிஸ் கவுன்சிலிங் சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்கண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**Website: chrysalislife.org**

**Phone:** +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998

**Email: counselor@chrysalislife.org**

கிறிசலிஸ் கவுன்சிலிங் என்பது ஆல் பீப்பிள் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிள் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் 'கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள்' ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை "ஆல் பீப்பிள் சர்ச்"க்கு காசோலை / வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்:** All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்:** 50200068829058
**IFSC குறியீடு:** HDFC0004367
**வங்கியின் பெயர்:** HDFC Bank, 7M/308 80 Feet Road, HRBR Layout, Kalyan Nagar, Bengaluru, 560043, Karnataka, India

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிள் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள்*

*சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* **apcwo.org/give** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.


**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

# DOWNLOAD THE FREE APP!

*Search for*
"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play







*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

ALL PEOPLES CHURCH
Bible College
& MINISTRY TRAINING CENTRE

# ஆல் பீப்பிள் சர்ச் வேதாகமக் கல்லூரி

**apcbiblecollege.org**

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள் சர்ச் வேதாகமக் கல்லூரியில் (APC-BC), ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், **திங்கள் முதல் வெள்ளி வரை,** இந்திய நேரப்படி **காலை** 9:00 **முதல் நண்பகல்** 12 **மணி வரை (UTC+5:30)** வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்: apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில் விண்ணப்பிக்கவும்,** மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

மக்கள், சமூகங்கள் மற்றும் புவியியல் பகுதிகள் மீது வானம் திறக்கப்படுதலைப் பற்றிய புதிய புரிதலையும் நுண்ணறிவையும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பெற்று வருகிறது. உலகில் வேல்ஸ் மற்றும் புளோரிடா போன்ற சில பகுதிகளும், இந்தியாவில் ஷில்லாங் என்ற இடமும் திறந்த வானத்துக்குத் "தலைசிறந்த இடங்களாக" இருந்துவந்ததாகத் தெரிகிறது.

வானம் திறக்கப்படுதலைப் பற்றி வேத வாக்கியங்கள் என்ன வெளிப்படுத்துகின்றன, அதன் அர்த்தம் என்ன, அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பனவற்றை அறிந்துகொள்வதற்கான எளிய ஆய்வே இந்தப் புத்தகத்தின் வெளியீடாகும். இந்தப் புத்தகத்தை வாசிப்பதன் மூலம், ஜெபிக்கவும் தங்கள் வாழ்க்கையிலும், தங்களது உள்ளூர் திருச்சபைகள் மற்றும் தங்கள் சமூகங்கள் மீது "வானம் திறக்கப்படுதலுக்கான" வழியை உண்டாக்கவும் அநேகர் ஊக்குவிக்கப்படுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். ஒரு பிராந்தியத்தில் உள்ள உள்ளூர் திருச்சபைகள் தங்கள் நகரத்தின் மீது அல்லது பிராந்தியத்தின் மீது வானம் திறக்கப்படவும், திருச்சபை எழுப்புதல் அடையவும் மற்றும் அந்த நகரம் அல்லது பிராந்தியம் மறுரூபமடையவும் ஜெபிப்பதற்காக ஒன்றிணையும் முயற்சியில் ஒன்று கூடிவர ஏவப்படுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

**All Peoples Church & World Outreach,**
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org